சுமார் 1 இலட்சம் 30,000 மக்கள் தொகைக்கு மேலான மக்களுக்கு அங்கே போதுமான குடிநீர் கிடைக்க வாய்ப்பை இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி நகராட்சி எல்லைகளுக்கு உட்பட்ட மக்களுக்கு இன்றைக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை பொறுத்தவரை நகராட்சிக்கு உட்பட்டிருக்கின்ற பகுதிகளுக்கு மட்டுமாக இந்தத் திட்டம் தீட்டப்பட்டு இன்றைக்கு இந்தத் திட்டத்தை புறநகர்ப் பகுதிக்கு நீட்டிக்க இயலாத நிலைமை இருக்கிறது. ஆனாலும்கூட இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நகராட்சியினுடைய எல்லைப் பகுதியிலே ஏதாவது ஒரு பொது குழாய் போட்டோம் என்று சொன்னால் அங்கே அருகாமையில் இருக்கின்ற மக்களுக்குப் பயன்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு சாத்தியக்கூறாக இருக்கும் என்பதை ஆய்வு செய்துதான் முடிவு எடுக்க வேண்டும். ஆகவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இதுசம்பந்தமாக குறிப்பு அனுப்பப்பட்டு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 199, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

199—

ஆதிதிராவிடர் பெண்கள் விடுதிக்குக் கூடுதல் கட்டிடம்

***36522—திரு. கி. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் ஆதிதிராவிடர் பெண்கள் தங்கும் விடுதிக்குப் போதிய இடம் இன்மையால் கூடுதலாகக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டையில் ஆதிதிராவிடர் பெண்கள் தங்கும் விடுதிக்கு கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் மேலாண்மை இயக்குநர் தாட்கோ அவர்களிடமிருந்து மதிப்பீடுகள் பெற்று மேற்படி கட்டிடம் கட்ட அரசு பரிசீலனை செய்யும்.

1995 ஏப்ரல் 3]

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டையில் ஆதிதிராவிடர் பெண்கள் விடுதிக்கு புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு சாத்தியம் இல்லை, குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னார்கள். பட்டுக்கோட்டை இப்போது முக்கியத்துவம் அடைந்து வருகிறது. அது வளரும் நிலையை அடைந்து கொண்டிருக்கிறது. அந்த மாதிரி நிலையில் பெண்களுக்கு அதிகமாக இட ஒதுக்கீடு தந்து, 69 சதவீதம் பெற்றுத் தந்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெற்றி அடைந்து, இந்த ஆதி திராவிடர்நலத்துறைக்கு மிகச் சிறந்த சலுகைகளைச் செய்து வருகிறார்கள். அதை இந்த ஆண்டிலே செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல் ஆண்களுக்கும் அதுபோன்ற ஒரு விடுதியை கட்டித்தர அரசு முடிவு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு இந்த ஆண்டுகூட கும்பகோணத்திற்கு பெண்கள் விடுதியை இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இன்னும் 3 கட்டிடங்கள்தான் பெண்களுக்கு கட்ட வேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் அந்த மூன்றும் பரிசீலிக்கப்படும். பட்டுக்கோட்டையிலுள்ள ஆண்கள் விடுதியை நான் பார்த்தேன். அதற்கு நிரந்தரமான கட்டிடம் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் அது தெரியும். அது நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. துணைக் கட்டிடத்திற்கு பெண்கள் விடுதி கேட்டார்கள். அந்தக் கோரிக்கை எதிர்காலத்தில் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, தேவையைக் கருதி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நல்ல செய்தியை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதோடு இந்த மூலக் கேள்வியை ஒட்டியே அதன் தொடர்ச்சியாக எனது ஊரில் ஆவுக்கோட்டையில் 42 பட்டாக்கள் ஆதி திராவிடர்களுக்கு என்று கொடுக்கப்பட்டன. அதிலே 25 கட்டிடங்கள் கட்டுவதற்கு அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்கு எனது நன்றியைத் தெரிவிக்கும் வகையில் தெரிவித்துக்கொண்டு மீண்டும் அந்த 17 பேருக்கு அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்குமாறும் அவர்கள் இருக்கிற இடத்திலிருந்து செல்ல சாலை வசதி இல்லாததால் அந்த ஏரிக் கரை, திருமேணி ஏரிக்கரையோடு சேர்ந்து போவதற்கு ஒரு சாலை 1.8 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அந்தச்சாலையை சீர்படுத்தியும், அவர்கள் உபயோகம் செய்யும் மின்னடியான் குளம் என்ற இடத்தில் உள்ள அவர்கள் குளிக்கும் குளத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே துணைக் கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் உங்களுடைய ஊரைப் பற்றிய எல்லாவற்றையும் பற்றிக் கேட்டால் எப்படிப் பதிலளிக்க முடியும்? மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதியின்பால் அன்பு கொண்ட காரணத்தால் கோரிக்கைகளை பலவாறு அடுக்கிக் கொண்டே செல்கிறார்கள். அது உள்ளாட்சித் துறைக்குச் சம்பந்தப்பட்ட கோரிக்கையாக இருந்தாலும்கூட ஆதிதிராவிடர் மக்களுக்காகக் கேட்கிற கேள்வி அது. ஆகவே, இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு 50 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டப்படவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் வீடுகள் கட்டப்படும். இருப்பினும் நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, துறையை ஆய்வு செய்தபோது, அவர்கள் அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்கள். முதற்கட்டமாக இதுவரையில் தொகுப்பு வீடுகள் கட்டாத ஆதிதிராவிட குடியிருப்புகள் முன்னுரிமைப் பட்டியலுக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது சட்டமன்ற உறுப்பினர் சொல்லுகின்ற கிராமத்திற்கு ஏற்கனவே 25 வீடுகள் அளித்து இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அது சாத்திய கூறு இல்லை. இருந்தாலும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சரிடம் அவர் கேட்டுப்பெறலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 200, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

200—

செங்கம் தொகுதியில் மண்பாண்ட அலகு ஏற்படுத்த ஆய்வு

* **36640—***டாக்டர் பெ. வீரபாண்டியன்:*

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதியில் மண்பாண்ட அலகு ஏற்படுத்தும் அளவுக்கு மூலப்பொருட்கள் எளிமையாக கிடைப்பதை அரசு ஆய்வு செய்துள்ளதா?